

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



மனுக்கள் குழு

(2014 – 2015)

(பதினான்காவது பேரவை)

நாற்பத்து ஆறாவது அறிக்கை

22.10.2010 –ஆம் நாளன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பெற்று 2009–2011–ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழு **09.02.2011**–ஆம் நாள் அன்று பேரவைக்கு அளித்த **118**–வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது சம்பந்தப்பட்ட துறைகளால் மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் 22 SEP 2015)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2014 – 2015)

(பதினான்காவது பேரவை)

நாற்பத்து ஆறாவது அறிக்கை

22.10.2010 –ஆம் நாளன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பெற்று 2009–2011–ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழு 09.02.2011–ஆம் நாள் அன்று பேரவைக்கு அளித்த 118–வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது சம்பந்தப்பட்ட துறைகளால் மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

			பக்கங்கள்
1.	2014–2015–ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் அமைப்பு	-	iii
2.	அறிக்கை	-	v
3.	இணைப்பு - I குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்	-	1 - 5
4.	இணைப்பு - II குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்	-	9 - 26
5.	இணைப்பு - III குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்	-	29 - 39

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு (2014 – 2015)

(பதினான்காவது பேரவை)

(2014-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ஆம் நாள் நியமனம் செய்யப்பட்டது)

தலைவர்

திரு. ஆர். மனோகரன்
(அரசு தலைமைக் கொறடா)

உறுப்பினர்கள்

திரு. பா. கணேசன்
திரு. ஆர்.என். கிட்டுசாமி
திரு. கே. பொன்னுசாமி
திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி
டாக்டர் த. ஹரிதாஸ்
திரு. அழகாபுரம் R. மோகன்ராஜ்
திரு. எல். வெங்கடேசன்
திரு. டி.ஆர்.பி. ராஜா
திரு. கே. உலகநாதன்
திரு. ஆ. ராமசாமி

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் : செயலாளர்
திரு. இரா. பழனிசாமி : இணைச் செயலாளர்
திரு. மு. கருணாநிதி : துணைச் செயலாளர்

19.2.2015 முதல் பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ளனர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
மனுக்கள் குழு (2014–2015)
(பதினான்காவது பேரவை)
நாற்பத்து ஆறாவது அறிக்கை
முன்னுரை

2014–2015–ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் நாற்பத்து ஆறாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

2014–2015–ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழு, 09.04.2015–ஆம் நாளன்று **திருச்சிராப்பள்ளி** மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் கூடியது. அக்கூட்டத்தில் 22.10.2010–ஆம் நாளன்று **திருச்சிராப்பள்ளி** மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பெற்று 2009–2011–ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழு 9.02.2011–ஆம் நாள் அன்று பேரவைக்கு அளித்த 118–வது அறிக்கையில் பரிந்துரை வழங்கப்பட்ட 22 மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறைகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கைகளை குழு மறு ஆய்வு செய்தது.

மறு ஆய்வு செய்யப்பட்ட 22 மனுக்களில் 4 மனுக்கள் மீது குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 11 மனுக்கள் மீது துறைகள் அளித்த பதிலுரைகள் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதால், அவை படித்துப் பதிவு செய்யப்பட்டனவாகக் கருதப்பட்டன. மீதமுள்ள 7 மனுக்கள் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டன.

குழு பரிந்துரை வழங்கிய மனுக்களின் விவரங்கள் இணைப்பு–I–இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு–II–இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு–III–இல் அளிக்கப்பட்டுள்ளன.

25.08.2015–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்றக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை – 600 009,
25.08.2015
மன்மத, ஆவணி திங்கள் 8–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு – 2046.

ஆர். மனோகரன்,
தலைவர், மனுக்கள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – I

குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
1.	21661	திரு. சேட்டு (எ) அருணாசலம், செயலாளர், கல்லூர் தி.மு.க. கிளை, முசிறி வட்டம், திருச்சிராப்பள்ளி.	முசிறி ஊராட்சி ஒன்றியம், குணசீலம் ஊராட்சி, கல்லூர் கிராமத்தில் சமுதாய கூடம் கட்டித்தரக் கோரியது.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
முசிறி ஊராட்சி ஒன்றியம், குணசீலம் ஊராட்சி, கல்லூர் கிராமத்தில் சுமார் 600 குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். அவர்களில் பெரும்பாலோர் வசதி அற்றவர்கள். அப்பகுதியில் சமுதாய கூடம் கட்டும் பணி வரும் நிதியாண்டில் சிறப்பு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் சமுதாய கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (முசிறி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கடித எண்.அ4/4144/06, நாள்: 19–10–2010)	முசிறி ஊராட்சி ஒன்றியம், குணசீலம் ஊராட்சி, கல்லூர் கிராமத்தில், ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சமும், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து முறையே இரண்டரை இலட்சத்தினை பெற்று இரண்டு மாத காலத்திற்குள் சமுதாய கூடத்தினை கட்டிக் கொடுக்க குழு பரிந்துரை செய்கிறது. பணி முடித்ததற்கான அறிக்கையினைப் பெறவும் குழு விரும்புகிறது.

		துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
		(7)	(8)
		குணசீலம் ஊராட்சிக்கு உட்பட்ட கல்லூர் கிராமத்தில் அரிசனத்தெருவில் சமுதாய கூடம் கட்டுவதற்கு, நடப்பு நிதியாண்டில் 2015–16–க்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி அல்லது பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (வட்டார வளர்ச்சி அலுவலர், முசிறி அவர்களின் கடித எண்.ந.க.அ6/1237/2013, நாள்: 06.04.2015)	கல்லூர் கிராமத்தில் விரைவில் சமுதாயக் கூடம் கட்ட முசிறி வட்டார வளர்ச்சி அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2.	21683	திரு. எம். பாலசுப்ரமணியன், த/பெ.முனியாண்டி (லேட்), 6/121B, அந்தரப்பட்டி, முசிறி வட்டம்.	குடியிருப்பு பகுதியில் குடிநீர் குழாய், தெருவிளக்கு போட வேண்டுவது தொடர்பாக.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மனுதாரர் கோரிக்கை தொடர்பாக வருகின்ற ஒன்றிய குழுக்கூட்டத்தில் நிர்வாக அனுமதி பெற்று ரூ.65,000/– மதிப்பீட்டில் புதிய ஆழ்குழாய் கிணறு மற்றும் தெருவிளக்கு அமைத்துத் தரப்படவுள்ளது. (தூத்தையங்கார்பேட்டை, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டாரம்) அவர்களின் கடித எண்.ந.க.அ5/491/2010 நாள்: 8–10–2010)	முசிறி வட்டம், அந்தரப்பட்டி குடியிருப்புப் பகுதியில், குடிநீர்க் குழாய் மற்றும் தெருவிளக்கு அமைத்துத் தர, ஊராட்சி ஒன்றிய குழுக் கூட்டத்தில் நிர்வாக அனுமதி பெற்று, விரைவில் கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வட்டார வளர்ச்சி அலுவலருக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(7)	(8)
எம்.புதுப்பட்டி ஊராட்சியை சேர்ந்த அட்டாளப்பட்டியில் மனுதாரர் குடியிருக்கும் பகுதிகளுக்கு 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் தினசரி குடிநீர் தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தெருவிளக்குகள் அமைத்திட தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஊராட்சி மூலமாக கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் தெருவிளக்கு வசதி வழங்கப்படும். (வட்டார வளர்ச்சி அலுவலர், தாத்தையங்கார்பேட்டை அவர்களின் கடித எண். ந.க.பி2/ 1759 / 2015, நாள்: 06.04.2015)	முசிறி வட்டம், அந்தரப்பட்டி குடியிருப்பு பகுதியில் விரைவில் தெருவிளக்குகள் அமைத்து தர உரிய நடவடிக்கை எடுக்க தாத்தையங்கார்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3.	21693	திரு. எஸ். ரவி, த/பெ. சீனிவாசன், ராக்கம்பட்டி (கொட்டம்), வேளக்காநத்தம் (அ) முசிறி தாலுக்கா, திருச்சிராப்பள்ளி.	- முசிறி ஊராட்சி ஒன்றியம், பேரூர் ஊராட்சி ராக்கம்பட்டி கிராமத்திலிருந்து 1/2 கி.மீ. தூரத்தில் உள்ள கொட்டத்திற்கு தெருவிளக்கு அமைத்து தரக்கோரியது.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
முசிறி ஊராட்சி ஒன்றியம் பேரூர் ஊராட்சி ராக்கம்பட்டி கிராமத்திலிருந்து 1/2 கி.மீ தூரத்தில் உள்ள கொட்டத்திற்கு தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்வதற்கு, வரும் நிதியாண்டில் ஊரக கட்டமைப்பு திட்டத்தின்கீழ் அமைத்துத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (முசிறி ஊராட்சி ஒன்றியம், வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கடித எண்.அ4/4144/06 நாள்: 19–10–2010)	முசிறி ஊராட்சி ஒன்றியம், பேரூர் ஊராட்சி, ராக்கம்பட்டி கிராமம், கொட்டத்தில், சிறப்பு நேர்வாக, ஒன்றிய நிதியிலிருந்து நிதி ஒதுக்கி, தேவையான தெருவிளக்குகள் அமைக்க, மாவட்ட ஆட்சியர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்வதுடன், முசிறி, வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து பணி முடித்தமைக்கான அறிக்கையைப் பெறவும் குழு விரும்புகிறது.
துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(7)	(8)
ராக்கம்பட்டி கிராமத்திற்கு தெருமின்விளக்குகள் அமைத்திட மதிப்பீடு மின்வாரியத்திடம் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பெற்று, ஊராட்சி நிதியில் தெருமின் விளக்குகள் அமைத்திட உரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். **(வட்டார வளர்ச்சி அலுவலர், முசிறி அவர்களின் கடித எண்.அ6/1237/13, நாள்: 06.04.2015)**	ராக்கம்பட்டி கிராமத்திற்கு தெருமின்விளக்குகள் அமைத்திட மின்வாரியத்திடம் விரைவில் மதிப்பீட்டு பெற்று இப்பணியினை விரைவில் முடிக்குமாறு முசிறி வட்டார வளர்ச்சி அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
4.	21712	திரு. வை. தியாகராஜன், தலைவர், மறுமலர்ச்சி மன்றம், அய்யப்ப நகர், திருச்சிராப்பள்ளி.	திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டம், கே.சாத்தனூர் கிராமத்தில் உள்ள செங்குளம் ஏரியைத் தூர்வாரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கே. சாத்தனூர் கிராமத்தில் செங்குளம் உள்ளது. இவ் ஏரியானது புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம் பாசனம் பெறும் ஏரியாகும். இதன் பாசனப் பரப்பு 76.43 ஏக்கர். இவ் ஏரியினை தூர்வாரி கரை பலப்படுத்த ரூ.5.00 இலட்சம் செலவாகும். எனவே வரும் நிதியாண்டில் இப்பணிக்கு நிதி ஆதாரம் பெற்று செயல்படுத்தப்படும். (திருச்சிராப்பள்ளி, செயற்பொறியாளர் பொதுப்பணித் துறை அவர்களின் கடித எண்.ந.க.586எம்/2010/கோ.206/ வ1 நாள்: 06–10–2010)	திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் வட்டம், கே. சாத்தனூர் கிராமத்தில் உள்ள செங்குளம் ஏரியைத் தூர்வாரி அதன் கரைகளைப் பலப்படுத்தி சுற்றுச் சுவர் கட்டித்தர விரைவில் நடவடிக்கை எடுக்க, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.
துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(7)	(8)
திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கே.சாத்தனூர் கிராமத்தில் செங்குளம் உள்ளது. இவ் ஏரியானது புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம் பாசனம் பெறும் ஏரியாகும். இதன் பாசனப்பரப்பு 76.43 ஏக்கர். இவ் ஏரியினை தூர்வாரி கரை பலப்படுத்த ரூ.10.00 இலட்சம் செலவாகும். எனவே, வரும் நிதியாண்டில் இப்பணிக்கு நிதி ஆதாரம் பெற்று பணி மேற்கொள்ளப்படும். (செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, நீர் ஆதார அமைப்பு, ஆற்று பாதுகாப்பு கோட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.272எம்/கோ206/வ3/2015 நாள்: 6.4.2015)	செங்குளம் ஏரியில் தூர்வாரும் பணியினை நடப்பாண்டில் செய்து முடிக்க செயற்பொறியாளர் பொதுப்பணித் துறை அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
1.	21594	திரு. வி. சிவராமன், 6/1660 ஷோபனா இல்லம், ஆனந்தநகர், பிச்சாண்டார்கோவில்.	மண்ணச்சநல்லூர் வட்டம், பிச்சாண்டார்கோவில் கிராமம் NH 45 தேசிய நெடுஞ்சாலைக்கு கீழ் புறம் ஆனந்த நகர், குறிஞ்சி நகரில் வாய்க்காலில் குறுக்கே தென்வடலாக காம்பவுண்ட் சுவர் எழுப்பி மழை நீர், கழிவு நீர் கிழக்கே செல்லாமல் தடுத்துவிட்டனர். வாய்க்காலில் இருபுறமும் வீடு கட்டியவர்கள் மண்ணை போட்டு மூடிவிட்டார்கள் அதனால் கழிவு நீர், மழை நீர் தேங்கி உள்ளதை அகற்றி வாய்க்காலை தூர் வாரவும் காம்பவுண்ட்களை அகற்ற கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், பிச்சாண்டார்கோவில் ஊராட்சி ஆனந்த நகர், குறிஞ்சி நகரில் பாதி இடங்களில் ஆக்கிரமிப்பு மற்றும் மண் அகற்றும் பணி ஊராட்சி மன்ற தலைவரால் அகற்றப்பட்டது மீதமுள்ள இடங்களை சர்வே செய்து ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மண்ணச்சநல்லூர், ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரின் பதிலுரை.)	மண்ணச்சநல்லூர் வட்டம், பிச்சாண்டார்கோவில் ஆனந்த நகரில் மழைநீர், கழிவுநீர் செல்லும் வாய்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியாளர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது. பணி முடிக்கப் பெறறது குறித்து அறிக்கையினைப் பெற குழு விரும்புகிறது.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
மண்ணச்சநல்லூர் வட்டம், பிச்சாண்டார்கோவில் ஊராட்சி ஆனந்த நகர், குறிஞ்சி நகரில் பாதி இடங்களில் ஆக்கிரமிப்பு மற்றும் மண் அகற்றும் பணி ஊராட்சிமன்ற தலைவரால் அகற்றப்பட்டது மீதமுள்ள இடங்களை சர்வே செய்து ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் ரூ.5 கோடி மதிப்பீட்டில் State Insfrastructure Amenities Fund திட்டத்தின் கீழ் பிச்சாண்டார்கோவில் மெயின் வீதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. (வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், மண்ணச்சநல்லூர் அவர்களின் கடித எண்.ந.க.அ3 /5041 / 2013, நாள்: 01.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
2.	21597	திரு. P. பாலு உடையார், 4–வது வார்டு உறுப்பினர், நடுப்பாகனூர், பாகனூர் ஊராட்சி.	நெடுஞ்சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்புகளை அகற்றி போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் தார்சாலையாக அமைத்துத் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

திருச்சி – மேலூர் – மதுரை சாலை (தே.நெ.45பி), கி.மீ.10/6இல் பிரிந்து வடக்கு தெற்கு பாகனூர் சாலை கி.மீ.0/0–6/4 = 6.4. கி.மீ. இது தார் தளம் கொண்ட இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இச்சாலை இதர மாவட்ட சாலை இனத்தை சார்ந்ததாலும் போக்குவரத்து செறிவு குறைவாக உள்ளதாலும் தற்பொழுது அகலப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(கோட்டப்பொறியாளர் (நெ.) திருச்சிராப்பள்ளி அவர்களின் க.எண்.2611/2010–2011/ஆ5, நாள்: 19.10.2010)

குழுவின் பரிந்துரை

(6)

திருச்சிராப்பள்ளி – மேலூர் – மதுரை சாலையிலிருந்து பிரிந்து செல்லும் வடக்கு தெற்கு பாகனூர் சாலையின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை விரைவில் அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க கோட்ட பொறியாளர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

திருச்சி – மேலூர் – மதுரை சாலை (தே.நெ.45பி) கி.மீ 10/6இல் பிரிந்து வடக்கு தெற்கு பாகனூர் சாலை கி.மீ 0/0–6/4=6.4 ஆகும். இது தார் தளம் கொண்ட இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையில் கி.மீ0/0–6/4ல் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு சி.ஆர்.ஐ.டி.பி 2014–2015 திட்டத்தின் கீழ் ஒரு வழித்தடத்திலிருந்து இடைவழித்தடமாக அகலப்படுத்துதல் மற்றும் கி.மீ5/8ல் சிறுபாலத்தை திரும்ப கட்டுதல் உட்பட பணிக்கு ரூ.295.00லட்சம் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(கோட்டப்பொறியாளர் (நெ), திருச்சி அவர்களின் கடித எண்.2611/2010–2011/ஆ5, நாள்: 06–04–2015)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
3.	21615	திரு. து. தங்கராசு, 60–ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, காவல்காரத் தெரு பாண்டமங்கலம், உறையூர், திருச்சி–3.	60–ஆவது வார்டுக்குட்பட்ட கோணக்கரை சுடுகாட்டினை சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு மின்சார இடுகாடாக மாற்ற பணிகளை ஆரம்பிக்க கோரிய மனு.
		துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
		மனுதாரர் கோரியுள்ள கோணக்கரை சுடுகாட்டினை மின்சார இடுகாடாக மாற்றுவதற்கு வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அளித்து பணிகள் மேற்கொள்ளப்படும். (திருச்சிராப்பள்ளி, மாநகராட்சி ஆணையர் அவர்களின் கடித எண்.இ3/11482/10 (கோ.அபி.) நாள்: 01–10–2010)	திருச்சிராப்பள்ளி மாவட்டம், 60–ஆவது வார்டுக்குட்பட்ட கோணக்கரை சுடுகாட்டினை மின்சார இடுகாடாக மாற்ற உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.
		துறையின் பதிலுரை (7)	குழுவின் குறிப்புரை (8)
		கோணக்கரை சுடுகாட்டில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதி 2012–13ன் கீழ் ரூ.75.00லட்சம் மற்றும் மாநகராட்சி பொதுநிதி 2013–14ன் கீழ் ரூ.34.10 லட்சம் ஆக கூடுதல் ரூ.109.10 லட்சம் செலவில் நவீன எரிவாயு தகன மைய கட்டிடம் கட்டும்பணி முடிவு பெற்றுள்ளது. சத்திகரிப்பு அமைப்புகள் நிறுவும் பணிகள் முடியும் நிலையில் உள்ளது. விரைவில் இந்த நவீன எரிவாயு தகன மையம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது. மேலும், இம்மயானப் பகுதியைச் சுற்றிலும் ஆக்கிரமிப்பு ஏற்படாமல் இருக்கவும், பாதுகாப்பு கருதியும் மாநகராட்சி பொதுநிதி 2013–14ன் கீழ் ரூ.75.00 லட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. (ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் கடித எண்.இ3/11482/10(கோ.அபி), நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
4.	21656	திரு. டி. ராஜா, மாவட்ட செயலாளர், தமிழ் மாநில கட்டிட தொழிலாளர்கள் சங்கம், கிருஷ்ணாபுரம் ரோடு, தாராநல்லூர், திருச்சிராப்பள்ளி–8.	சத்திரம் பேருந்து நிலையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு அடிப்படை வசதி செய்துதரக் கோரியுள்ளது.

துறையின் பதிலுரை

(5)

(1) தற்போது சத்திரம் பேருந்து நிலையத்தில் விரிவாக்கம் செய்ய போதுமான இடவசதி இல்லை. மேலும் திருச்சி மாநகருக்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(2) பேருந்து நிலையத்தின் உட்புறம் 24 மணிநேரமும் குடிநீர் கிடைக்கும் வகையில் ஒரு குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் இடங்களில் குடிநீர் வசதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(3) இலவச சிறுநீர் கழிப்பிடம் 1 எண்ணிக்கையும் கட்டணக் கழிப்பிடங்கள் 2 எண்ணிக்கையும் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. புதிதாக ஒரு கழிப்பிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(4) சத்திரம் பேருந்து நிலையம் என்பதை பெயர் மாற்றம் செய்ய யாதொரு திட்டமும் இல்லை.

(5) சத்திரம் பேருந்து நிலையப் பகுதிகளான புனித வளனார் கல்லூரி மற்றும் அறிஞர் அண்ணா சிலை அருகிலும் நடைபாதை மேம்பாலம் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படவுள்ளது.

துறையின் பதிலுரை தொடர்ச்சி	குழுவின் பரிந்துரை
(5)	(6)
(6) சத்திரம் பேருந்து நிலையத்தில் பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள தரைக்கடைகள் மட்டும் பொதுநலன் கருதி அகற்றப்பட்டு வருகிறது.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், சத்திரம் பேருந்து நிலையப் பகுதியில் நடைபாலங்கள் அமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கையினை பெற குழு விரும்புகிறது.

(திருச்சிராப்பள்ளி, மாநகராட்சி உதவி ஆணையர் அவர்களின் ந.க.இ1/8941/2010, நாள்: 06–10–2010)

துறையின் பதிலுரை

(7)

1) தற்போது சத்திரம் பேருந்து நிலையத்தில் விரிவாக்கம் செய்ய போதுமான இடவசதி இல்லை. மேலும் திருச்சி மாநகருக்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2) பேருந்து நிலையத்தின் உட்புறம் 24 மணி நேரமும் குடிநீர் கிடைக்கும் வகையில் ஒரு குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. 2000 லிட்டர் சின்டெக்ஸ் தொட்டி அமைக்கப்பட்டு உள்ளது. மேலும் உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் 2.00 லட்சம் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (R.O Plant) தொட்டி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3) இலவச சிறுநீர் கழிப்பிடம் 1 எண்ணிக்கையும் கட்டணக் கழிப்பிடங்கள் 2 எண்ணிக்கையும் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. மேலும் புதிதாக ஒரு கழிப்பிடம் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு 10.04.15 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட உள்ளது.

துறையின் பதிலுரை தொடர்ச்சி	குழுவின் குறிப்புரை
(7)	(8)
4) சத்திரம் பேருந்து நிலையம் என்பதை பெயர் மாற்றம் செய்ய யாதொரு திட்டமும் இல்லை. 5) புனித வளனார் கல்லூரி அருகில் நடைபாதை மேம்பாலம் அமைக்க திட்டமிடப்பட்டு தொல்பொருள் துறையில் ஆட்சேபனை தெரிவித்ததால் கைவிடப்பட்டது. மேலும் அறிஞர் அண்ணா சிலை அருகில் நடைமேம்பாலம் அமைக்க திட்டமிடப்பட்டதும், நெடுஞ்சாலைத் துறையின் ஆட்சேபனையால் கைவிடப்பட்டது. 6) சத்திரம் பேருந்து நிலையத்தில் பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள தரைக்கடைகள் மட்டும் பொது நலன் கருதி அகற்றப்பட்டு வருகிறது. சத்திரம் பேருந்து நிலைய சுற்றுச்சுவர் பழுதடைந்ததை புதுப்பிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு (18.30 இலட்சம்) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட உள்ளது. (ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் கடித எண்.ந.க.இ1/8941/2010, நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
5.	21668	திரு. ஆ. முத்துராமன், தலைவர், வேம்பனூர் பெரியகுளம், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம், வேம்பனூர் அஞ்சல், இலுப்பூர் வழி, மணப்பாறை வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், வேம்பனூர் பெரியகுளம் பாசன வாய்க்கால்கள் மராமத்து செய்ய நிதி கோரி பரிந்துரை செய்வது.

துறையின் பதிலுரை

(5)

மணப்பாறை வட்டம், வேம்பனூர் கிராமம், வேம்பனூர் பெரிய குளத்தின் கீழ் நான்கு மதகுகள் உள்ளது. இம்மதகுகளின் கீழ் 4,105 மீட்டர் நீளத்திற்கு பாசன வாய்க்கால் கான்கிரீட் கட்டைகள் மூலம் 1991–1992–ஆம் நிதியாண்டில் கட்டப்பட்டது. இப்பாசன வாய்க்கால் பழுதடைந்த நிலையில் உள்ளது. இப்பாசன வாய்க்கால் சீரமைத்து தர தோராயமாக ரூ.50.00 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நபார்டு வங்கி நிதி உதவி திட்டத்தில் சேர்த்து, நிதி கிடைக்கப் பெற்றவுடன் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
(செயற்பொறியாளர், பொது, நீ.ஆ.அ. அரியாறு வடிநில கோட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.வ–2/கோ–38/2010/நாள்: 28–09–2010)

குழுவின் பரிந்துரை

(6)

மணப்பாறை வட்டம், வேம்பனூர் கிராமம், வேம்பனூர் பெரிய குளத்தின் கீழ் உள்ள நான்கு பாசன வாய்க்கால்களையும் சீரமைக்க தேவையான நிதியை விரைந்து நபார்டு வங்கியிலிருந்து பெற்று மேற்படி பணியை நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்குமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர், அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

தமிழக கதர் மற்றும் தொழில்துறை அமைச்சர் அவர்களால் மணப்பாறை மற்றும் மருங்காபுரி வட்டங்களின் மேம்பாட்டிற்கான திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், வேம்பனூர் கிராமம், வேம்பனூர் பெரிய குளத்தினை புனரமைப்பு செய்வதற்கான திட்டம் பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி இப்பணிக்கான விரிவான மதிப்பீடு நபார்டு வங்கி நிதியுதவியின் கீழ் மேற்கொள்ள அனுப்பப்பட்டு குறிப்புரைகளுடன் திருப்பப்பட்டது. தற்பொழுது குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு மதிப்பீடு ரூ.62 லட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது. இதற்குரிய அரசாணை மற்றும் உரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் இப்பணி நிறைவேற்றப்பட உள்ளது.
(செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை, நீர் ஆதார அமைப்பு, அரியலாறு வடிநில கோட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.வ1/கோ.மனுக்கள் குழு/2015/எம், நாள்: 06.04.2015)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6.	21672	திரு. ஏ.அப்துல் காதர், த/பெ. எம். அப்துல்லா, 41, அப்துல்லா தெரு, அரியமங்கலம், காமராஜ் நகர், திருச்சி–10.	புதியதாக மருந்தக (Dispensary) கட்டிடம் கட்டித் தரக் கோருவது.

துறையின் பதிலுரை

(5)

மனுதாரர் குறிப்பிட்ட இடத்தில் ஏற்கெனவே நவல்பட்டு, காட்டூர், துவாக்குடி பகுதிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும் மாநகராட்சிக்குட்பட்ட இ.பி. ரோடு, வரகனேரி பகுதிகளில் மகப்பேறு மையம் மற்றும் மருந்தகங்கள் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் இப்பகுதியில் புதியதாக மருந்தகம் அமைப்பதற்கான அவசியம் ஏதும் எழவில்லை.

(திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நகர் நல அலுவலர் அவர்களின் கடித எண்.ந.க.10/7375/2010, நாள்:19–10–2010)

குழுவின் பரிந்துரை

(6)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியமங்கலம் கோட்டம், காமராஜ் நகர் பகுதியில், புதிய மருந்தகம் அமைக்க, அரசின் அனுமதியை விரைந்து பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

2011ம் ஆண்டு மக்கள் தொகையினை அடிப்படையாக கொண்டு 50,000 மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு 18 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி மனுதாரர் கோரியுள்ள காமராஜ் நகர் என்ற பகுதியை உள்ளடக்கிய வார்டு எண்.28 மற்றும் அதன் அருகில் உள்ள 29, 61, 62 ஆகிய வார்டுகளை உள்ளடக்கியவாறு 50,000 மக்கள் தொகை கொண்ட பகுதிக்கு காட்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்

துறையின் பதிலுரை தொடர்ச்சி

(7)

செயல்பட்டு வருகிறது. மேற்படி காமராஜ் நகர் என்ற பகுதியானது காட்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 2 கி.மீ அருகில் உள்ளது. அதுபோல் மேலகல் கண்டார் கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 3 கி.மீக்கு அருகில் தெற்கே அமைந்துள்ளது. அதுபோல் இ.பி.ரோடு ஆரம்ப சுகாதார நிலையம் 4 கி.மீ அருகில் உள்ளது. ஏற்கனவே, தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ் 18 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பணியாளர்கள் நியமனம் செய்வதற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய சுகாதார நிலையம் உருவாக்கப்படும் எனில் தேவையான பணியாளர்களுக்குரிய பணியிடம் புதிதாக உருவாக்க தற்போது இயலாது. புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் எனில் குறைந்த பட்சம் 50000 மக்கள் தொகை கொண்ட சேவைப்பகுதி உருவாக்கப்பட வேண்டும். ஆனால், மனுதாரர் கோரியுள்ள வார்டு எண்.28க்கு 2011ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கீட்டின் படி சுமார் 10911 மக்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், காமராஜ் நகரை சுற்றி மூன்று அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அருகிலேயே அமைந்துள்ளதால், இப்பகுதிக்கு புதியதாக அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

(திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொது சுகாதார பிரிவு அவர்களின் கடித ந.க. எண். H10 / 7375 / 2010, நாள்: 06-04-2015)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
7.	21689	திரு. எம். அழகிரிசாமி, த/பெ. மாரிமுத்து (லேட்) ஆதனூர் அஞ்சல், பகளவாடி வழி, துறையூர் வட்டம்.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், ஆதனூர் கிராமம், ஆதனூர் ஏரிக்கரையில் உள்ள சாலையை அகலப்படுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலை திருச்சிராப்பள்ளி கோட்டப் பராமரிப்பிலுள்ள கண்ணனூர் – கட்டனாம்பட்டி சாலை கி.மீ. 0/0–4/4 ஆகும். இது தார்தளம் கொண்ட இதர மாவட்ட சாலை வகையைச் சேர்ந்ததாகும். இச்சாலையில் நடப்பு ஆண்டு 2010–2011–இல் பழுதடைந்த பகுதியில் 3 கி.மீ 3/0 – 4/4 மேம்பாடு செய்ய CRIDP திட்டத்தில் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதனூர் ஏரிக்கரை இச்சாலையில் கி.மீ.4/0–4/4 வரை 400 மீட்டர் செல்கிறது. இச்சாலையில் தற்பொழுது மேம்பாட்டு பணிகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சாலை இதர மாவட்ட சாலை என்பதாலும், போக்குவரத்து செறிவு குறைவாக உள்ளதாலும் தற்பொழுது அகலப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. (திருச்சிராப்பள்ளி கோட்டப்பொறியாளர் (நெ) அவர்களின் க.எண்.2611/2010–2011/இ.நி.வ2 நாள்: 14–10–2010)	திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், ஆதனூர் கிராமம், ஆதனூர் ஏரிக்கரையில் உள்ள சாலையை சி.ஆர்.ஐ.டி.பி. திட்டத்தில், அகலப்படுத்தித்தர மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

செயல்பட்டு வருகிறது. மேற்படி காமராஜ் நகர் என்ற பகுதியானது காட்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 2 கி.மீ அருகில் உள்ளது. அதுபோல் மேலகல் கண்டார் கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 3 கி.மீக்கு அருகில் தெற்கே அமைந்துள்ளது. அதுபோல் இ.பி.ரோடு ஆரம்ப சுகாதார நிலையம் 4 கி.மீ அருகில் உள்ளது. ஏற்கனவே, தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ் 18 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பணியாளர்கள் நியமனம் செய்வதற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய சுகாதார நிலையம் உருவாக்கப்படும் எனில் தேவையான பணியாளர்களுக்குரிய பணியிடம் புதிதாக உருவாக்க தற்போது இயலாது. புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் எனில் குறைந்த பட்சம் 50000 மக்கள் தொகை கொண்ட சேவைப்பகுதி உருவாக்கப்பட வேண்டும். ஆனால், மனுதாரர் கோரியுள்ள வார்டு எண்.28க்கு 2011ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கீட்டின் படி சுமார் 10911 மக்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், காமராஜ் நகரை சுற்றி மூன்று அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அருகிலேயே அமைந்துள்ளதால், இப்பகுதிக்கு புதியதாக அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

(திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொது சுகாதார பிரிவு அவர்களின் கடித ந.க. எண். H10 / 7375 / 2010, நாள்: 06-04-2015)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
7.	21689	திரு. எம். அழகிரிசாமி, த/பெ. மாரிமுத்து (லேட்) ஆதனூர் அஞ்சல், பகளவாடி வழி, துறையூர் வட்டம்.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், ஆதனூர் கிராமம், ஆதனூர் ஏரிக்கரையில் உள்ள சாலையை அகலப்படுத்தக் கோருதல்.	மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலை திருச்சிராப்பள்ளி கோட்டப் பராமரிப்பிலுள்ள கண்ணனூர் – கட்டனாம்பட்டி சாலை கி.மீ. 0/0–4/4 ஆகும். இது தார்தளம் கொண்ட இதர மாவட்ட சாலை வகையைச் சேர்ந்ததாகும். இச்சாலையில் நடப்பு ஆண்டு 2010–2011–இல் பழுதடைந்த பகுதியில் 3 கி.மீ 3/0 – 4/4 மேம்பாடு செய்ய CRIDP திட்டத்தில் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதனூர் ஏரிக்கரை இச்சாலையில் கி.மீ.4/0–4/4 வரை 400 மீட்டர் செல்கிறது. இச்சாலையில் தற்பொழுது மேம்பாட்டு பணிகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சாலை இதர மாவட்ட சாலை என்பதாலும், போக்குவரத்து செறிவு குறைவாக உள்ளதாலும் தற்பொழுது அகலப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. (திருச்சிராப்பள்ளி கோட்டப்பொறியாளர் (நெ) அவர்களின் க.எண்.2611/2010–2011/இ.நி.வ2 நாள்: 14–10–2010)	திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், ஆதனூர் கிராமம், ஆதனூர் ஏரிக்கரையில் உள்ள சாலையை சி.ஆர்.ஐ.டி.பி. திட்டத்தில், அகலப்படுத்தித்தர மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
		(7)	(8)
		இச்சாலை இதர மாவட்ட சாலை என்பதாலும், போக்குவரத்து செறிவு குறைவாக உள்ளதாலும் தற்பொழுது அகலப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. (கோட்டப்பொறியாளர் (நெ), திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண்.2611/2010–11/இநிவ2, நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8.	21694	திரு. கோல்டு, பா. குமரேசன், 52, கடைவீதி, பெட்டவாய்த்தலை.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அந்தநல்லூர் ஒன்றியத்தை சேர்ந்த சிறுகமணி மற்றும் பெட்டவாய்த்தலை பஞ்சாயத்தில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்க கோரியது தொடர்பாக.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
பெட்டவாய்த்தலை மற்றும் சிறுகமணி பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைத்திட ஏதுவாக அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை. (திருச்சிராப்பள்ளி இணைப் பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் அவர்களின் கடித எண் .ந.க. 1805/ 2008/ பொவிதி / நாள்:18.10.2010)	திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் வட்டம், அந்தநல்லூர் ஒன்றியம், சிறுகமணி மற்றும் பெட்டவாய்த்தலை பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் வாயிலாக நிலம் தேர்வு செய்து, மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைத்துத்தர திருச்சிராப்பள்ளி மண்டல இணைப் பதிவாளர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
சிறுகமணியில் பெட்டவாய்த்தலை கூட்டுறவு நிறுவனம் மூலம் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைத்திட அரசு மற்றும் புறம்போக்கு நிலம் ஏதுமிருப்பின் அதிலிருந்து ஒதுக்கீடு செய்து தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி இவ்வலுவலக ந.க.2959–2012–பொ.வி.தி.1 நாள்: 14.07.2014 ஆம் தேதிய கடிதம் கேட்கப்பட்டது. இது தொடர்பாக தொடர்ந்து பல நினைவூட்டுக் கடிதங்களும் கடைசியாக 24.03.2015ம் தேதியிலும் அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து நிலம் ஒதுக்கீடு செய்து ஆணை வரப்பெற்றதும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (குணைப் பதிவாளர், (பொது விநியோகத் திட்டம்) திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண்.2959/2011/ பொ.வி.தி1, நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

மு

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9.	21696	திரு. மு. முருகன், த/பெ. முத்துசாமி, வ. பாகனூர் அஞ்சல், ராம்ஜி நகர் வழி, திருச்சி–620 009.	ஸ்ரீரங்கம் வட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், பாகனூர் ஊராட்சியில் பாகனூர் வண்டி பாதையை உறுதியான சாலையாக மாற்றித் தருதல் சம்மந்தமாக.

துறையின் பதிலுரை

(5)

மேற்கண்ட சாலை கிறிஸ்துவ மதத்தினர் கல்லறைக்குச் செல்லும் பாதையாக உள்ளது. உறுதியான சாலை அமைக்க ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி சிமெண்ட் சாலையாக அமைக்க வரும் நிதியாண்டில் 2011–2012 ஊரக உள்கட்டமைப்பு திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி முடிக்கப்படும்.

(மணிகண்டம், வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கடித எண்.ந.க.ஆ4/3344/2010 நாள்: 01–10–2010)

குழுவின் பரிந்துரை

(6)

திருவரங்கம் மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம் பாகனூர் வண்டிப்பாதையை 2011–2012 ஆம் நிதியாண்டில் ஊரக உள்கட்டமைப்பு திட்டத்தில் சேர்ந்து, சிமெண்ட் சாலையாக அமைத்துத் தர மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

பாகனூர் ஊராட்சியில் 2010–11ம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மனுதாரர் குறிப்பிட்டுள்ள பாகனூர் வண்டிப்பாதை ரூ.4,95,000/–மதிப்பீட்டில் உறுதியான மண்சாலையாக மேம்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. 2015–16ம் ஆண்டு ஒன்றிய பொதுநிதி திட்டத்தில் தார்சாலை அமைக்க முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(வட்டார வளர்ச்சி அலுவலர் (வ) ஊராட்சி ஒன்றியம், மணிகண்டம் அவர்களின் கடித எண்.ந.க.அ3/1948/2013 நாள்: 06.04.2015)

குழுவின் குறிப்புரை

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10.	21730	திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, தலைவர், இளைஞர் பொதுநல நற்பணிமன்றம், காந்திநகர், மண்ணச்சநல்லூர்.	காந்திநகர் 6ஆவது தெரு முதல் 10 ஆவது தெரு வரை சாலை வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

இப்பேரூராட்சி பொதுநிதியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்படி தெருக்களில் தற்சமயம் சாலை வசதி செய்ய இயலவில்லை. வரும் நிதியாண்டில் மேற்படி தெருக்களில் தார்சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(மண்ணச்சநல்லூர், பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் கடித எண்.ந.க.420/2010, நாள்: 19–10–2010)

குழுவின் பரிந்துரை

(6)

மண்ணச்சநல்லூர் பேரூராட்சி, காந்தி நகர் 6ஆவது தெரு முதல் 10ஆவது தெரு வரை, சாலையை சீர் செய்ய, பொது நிதியிலிருந்து நிதி ஒதுக்கி, உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

மண்ணச்சநல்லூர் பேரூராட்சி மற்றும் ச. கண்ணனூர் பேரூராட்சியில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டம் நடைமுறைப்படுத்த விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தயார்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12436–2012–ஆ5 நாள்:05.09.2012–ன்படி சென்ற நிதியாண்டுவரை 3 கோடியும் இந்த நிதியாண்டில் 1 கோடியும் ஆக கூடுதல் தொகை ரூ.4 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டது. எனவே இதன் அடிப்படையில் மண்ணச்சநல்லூர் பேரூராட்சி பகுதியில்

துறையின் பதிலுரை தொடர்ச்சி	குழுவின் குறிப்புரை
(7)	(8)
பாதாள சாக்கடைத் திட்டம் நடைமுறையில் உள்ளதால் சாலை வசதிகள், வடிகால் வசதிகள் அமைக்க கூடாது என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, காந்தி நகர் 6–வது தெரு முதல் 10 வது தெருக்களுக்கு தார்சாலை அமைக்க இயலாத நிலை உள்ளது. (உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண். ந.க.420/2010, நாள்: 06.04.2015)	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11.	21750	திரு. எம். உமர்ஹத்தா, மாவட்ட துணை தலைவர், இந்திய தேசிய காங்கிரஸ், எண்.217, பாரதிதாசன் தெரு, துவாக்குடி மலை.	துவாக்குடி நகராட்சி வார்டு எண் 12இல் சர்வே எண்.603/32இல் 0.13.60 பரப்பளவு கொண்ட அரசுக்கு சொந்தமான நத்தம்புறம்போக்கு நிரிப்பாறை என்ற பகுதியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு மேற்படி பாறையில் ஆடு, மீன், கோழி கழிவுகளை கொட்டப்பட்டும் பாறையை சுற்றியுள்ளவர்கள் நேரடியாக மலக்கழிவுகளை பாறையில் விடுகின்ற காரணத்தினால் சுற்றியிருக்க கூடிய பொதுமக்களுக்கு மலேரியா போன்ற கடுமையான வியாதிகள் பரவுவதால் பாறையை மூடக்கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

துவாக்குடி 12ஆவது வார்டு அக்பர் சாலை கடைவீதி பகுதியில் ஆடு, கோழி இறைச்சி கடை மற்றும் மீன் கடைகளில் ஏற்படும் கழிவுகளை நகராட்சியில் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் கொட்டப்பட்டு தினந்தோறும் நகராட்சி பணியாளர்களால் மேற்படி கழிவுகளை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. நரிப்பாறையில் ஒட்டியுள்ள வீடுகளின் பட்டியல்கள் தயார் செய்து நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் சுழிப்பறைகளோடு சேர்த்து செப்டிக்டேங்க் தொட்டி கட்டுவதற்கு சம்பந்தப்பட்ட வீடுகளுக்கு பொது சுகாதார சட்டப்படி அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாப இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு துறைவாரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(செயல் அலுவலர் துவாக்குடி நகராட்சி அவர்களின் கடித எண். ந.க.473/10/அ2, நாள்: 6.10.2010)

துறையின் பதிலுரை

(7)

துவாக்குடி 12–வது வார்டு அக்பர் சாலை கடைவீதி பகுதியில் ஆடு, கோழி இறைச்சி கடை மற்றும் மீன் கடைகளுக்கு பொது சுகாதார சட்டம் 1939 பிரிவுகளின்படி அறிவிப்பு வழங்கப்பட்டு மேற்படி கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மூடியுடன் கூடிய டம்பர் பின் வைக்கப்பட்டு அதில் கழிவுகளை கொட்ட நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரை

(6)

துவாக்குடி நகராட்சி, வார்டு எண் 12இல், நரிபாறை என்ற இடத்தில் ஆடு, கோழி, மீன், இறைச்சி கழிவுகள் மற்றும் செப்டிக்டேங்க் கழிவுகள் கொட்டுதல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

(7)

கொட்டப்படும் கழிவுகளை தினந்தோறும் டம்பர்வாரி மூலம் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. நவீன இறைச்சிக்கூடம் அமைக்க நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் இல்லாத காரணத்தினால் வருவாய் துறையினரிடம் இடம் கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. நரிபாறை சுற்றியுள்ள வீடுகளுக்கு 1939ம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு சட்டம் பிரிவுகளின்படி 39(1) அறிவிப்பு வழங்கப்பட்டு கழிவுநீர் சேகரிக்கும் தொட்டியுடன் சேர்ந்த சுகாதார கழிவறை கட்டப்பட்டு கழிவுகள் கலக்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இன்றைய நிலையில் இறைச்சி கழிவுகள் மற்றும் சுகாதார கழிவுகள் பாறையில் கலப்பது தடுக்கப்பட்டுள்ளது.

(ஆணையர், நகராட்சி, துவாக்குடி அவர்களின் கடித எண்.210/2015/எச்1 நாள்: 06.04.2015)

(8)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

இணைப்பு – III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)
1.	21676	திரு. U.P.M. ரஹ்மத்துல்லா, ஜமாத் தலைவர், புத்தாநத்தம்–621 310, மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம்.	திருச்சி மாவட்டம் – மணப்பாறை வட்டம் புத்தாநத்தம் கிராமத்தில் 6,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட காமராஜர் காலத்தில் கட்டப்பட்ட நீர்த்தேக்கத்தொட்டி மிகவும் பழுதடைந்து உள்ளது. அதிலிருந்து குடிநீர் சப்ளை செய்ய மிகவும் சிரமமாக உள்ளது. எனவே பழுதடைந்த நீர்த்தேக்கத் தொட்டியை இடித்துவிட்டு அந்த இடத்தில் 1.00 இலட்சம் லிட்டர் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர கோருதல்.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியம் புத்தாநத்தம் ஊராட்சி புத்தாநத்தம் குடியிருப்பில் 2006–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 2,871 ஆகும். வாரிய விதிமுறையின்படி மேற்கண்ட மக்கள் தொகைக்கு 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டும். ஆனால் தற்சமயம் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள இரண்டு மேல்நிலை தொட்டிகள் புத்தாநத்தம் குடியிருப்பில் வாரியம் மூலம் கட்டி முடிக்கப்பட்டு பராமரிப்பிற்காக ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

துறையின் பதிலுரை தொடர்ச்சி

(5)

மேலும் நடப்பு நிதியாண்டில் (2010–2011) புதிய 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி குடிநீர் செல்லாத மேட்டுப்பகுதியில் (புத்தாநத்தம் கலைஞர் நகரில்) அமைப்பதற்கு வாரியம் மூலம் உத்தரவிடப்பட்டது. புதியதாக அமைக்கப்படவுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியினை கலைஞர் நகரில் அமைக்கப்படும்.'

(திருச்சி நிர்வாகப் பொறியாளர், அவர்களின் கடித எண்.21676/ கோ.மனுக்கள்குழு / உவஅ / 2010 நாள்:10.10.2010)

துறையின் பதிலுரை

(7)

திருச்சி மாவட்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியம் புத்தாநத்தம் ஊராட்சி புத்தாநத்தம் குடியிருப்பில் 2006ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 2871 ஆகும். வாரிய விதிமுறையின்படி மேற்கண்ட மக்கள் தொகைக்கு 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்கப்படவேண்டும். ஆனால் தற்சமயம் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள இரண்டு மேல்நிலை தொட்டிகள் புத்தாநத்தம் குடியிருப்பில் வாரியம் மூலம் கட்டி முடிக்கப்பட்டு பராமரிப்பிற்காக ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி குடிநீர் செல்லாத மேட்டுப்பகுதியில் (புத்தாநத்தம் கலைஞர் நகரில்) கட்டி முடிக்கப்பட்டு புத்தாநத்தம் ஊராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

குழுவின் பரிந்துரை

(6)

திருச்சிராப்பள்ளி, புத்தாநத்தம் கிராமத்தில் பழுதடைந்துள்ள நீர்தேக்கத் தொட்டிக்கு பதிலாக புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்துத்தர உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)	துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)	துறையின் பதிலுரை (7)	குழுவின் குறிப்புரை (8)
2.	21680	திரு. எம். ரெங்கசாமி, 5–ஆவது வார்டு உறுப்பினர், நவலூர் குட்டப்பட்டு ஊராட்சி மற்றும் (அஞ்சல்) திருச்சி–620 009.	ஸ்ரீரங்கம் தாலுகா, மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், நவலூர் குட்டப்பட்டு ஊராட்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரியில் இருந்து முத்துக்குளம் குளத்து கரை வழியாக திருநகர் மற்றும் பாகனூர் ஊராட்சி வரை தார்ச் சாலை அமைக்கும் பணி தொடர்பாக.	மேற்கண்ட சாலை தற்போது மண்சாலையாக உள்ளது. அந்த மண்சாலையானது குளத்தின் கரையில் அமைந்துள்ளது. சாலையின் தூரம் 2 கி.மீட்டருக்கு குறைவாக உள்ளதாலும், அகலம் 5 மீட்டருக்குள் இருப்பதால், இப்பணியினை PMGSY, NABARD திட்டத்தின் கீழ் மேற்கொள்ள இயலாது. (மணிகண்ட வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கடித எண்.ந.க.ஆ4/3344/2010, நாள்: 01.10.2010)	திருவரங்கம் வட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், நவலூர் குட்டப்பட்டு ஊராட்சி, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரியிலிருந்து முத்துக்குளம் குளத்துக்கரை வழியாக திருநகர் மற்றும் பாகனூர் ஊராட்சி, வடக்கு பாகனூர் வரை தார்ச்சாலை அமைக்க, சிறப்பு நேர்வாக கருதி, பி.எம்.ஜி.எஸ்.ஒய். அல்லது நபார்டு திட்டத்தில் சேர்த்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

		துறையின் பதிலுரை		குழுவின் குறிப்புரை
		(7)		(8)
		நவலூர் குட்டப்பட்டு ஊராட்சியில் 2010–2011 ஆம் ஆண்டு ஊரக உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தின் கீழ் (IGFF) நவலூர் குட்டப்பட்டு ஊராட்சி முத்துக்குளம் முதல் பாகனூர் (வழி திருநகர்) சாலை கி.மீ.0/0–1/10 ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலையாக அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. (வட்டார வளர்ச்சி அலுவலர், மணிகண்டம் அவர்களின் கடித எண்.ந.க.அ3/1948/2013, நாள்: 06.04.2015)		நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.
வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)		மனுவின் சுருக்கம் (4)
3.	21684	திரு. மா. மதலைமுத்து, செயலர், கிராம முன்னேற்ற சங்கம், கல்பாளையம், கொணலை அஞ்சல், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்–621 132.		மண்ணச்சநல்லூர் வட்டம், கொணலை ஊராட்சி கல்பாளையம் குடியிருப்பிற்கு சுத்தம் செய்து பாதுகாக்கப்பட்ட காவேரி குடிநீர் வழங்கக் கோருதல்.
		துறையின் பதிலுரை		
		(5)		
		திருச்சி மாவட்டத்தில் உள்ள முசிறி மற்றும் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கூடப்பள்ளி மற்றும் 129 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்காக தமிழக அரசு ஆணை எண்.139/நாள்: 28–7–2010 மூலம் ரூ.16.16 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.		

துறையின் பதிலுரை தொடர்ச்சி

(5)

இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் கொணலை ஊராட்சி கல்பாளையம் கிராமத்திற்கு காவேரிக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு தற்பொழுது ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் பெற கடைசி நாள்: 20–10–2010. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு முடிவு செய்தவுடன் விரைவில் பணிகள் துவங்கப்படும்.

(நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகரக் கோட்டம், திருச்சி அவர்களின் கடித எண்.1910/கோ.சட்டப்பேரவை மனுக்கள் குழு/ இவ.அ2/ நாள்:19–10–2010)

குழுவின் பரிந்துரை

(6)

கூடப்பள்ளி மற்றும் 129 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, மண்ணச்சநல்லூர் வட்டம், கொணலை ஊராட்சி, கல்பாளையம் கிராமத்திற்கும் காவிரிக் குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க நிர்வாகப் பொறியாளர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை

(7)

திருச்சி மாவட்டத்தில் உள்ள முசிறி மற்றும் மண்ணச்சநல்லூர் கூடப்பள்ளி மற்றும் 129 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கான பணிகள் அனைத்தும் நிறைவு பெற்று மண்ணச்சநல்லூர் ஒன்றியம், கொணலை ஊராட்சி, கல்பாளையம் குடியிருப்புக்கு 28.10.2014 முதல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டம் 27.12.2014 முதல் ஒப்பந்தக்காரர் பராமரிப்பில் உள்ளது.

(நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருச்சி அவர்களின் கடித எண்.க.கோ.மனுக்கள் குழு / இவ.அ2, நாள்: 07.04.2015)

குழுவின் குறிப்புரை

(8)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
4.	21700	திரு V. அரசு (எ) அய்யாசாமி, திராவிட முன்னேற்ற கழகம், பொருளாளர், திருவரங்கம் பகுதி, திருச்சி மாநகரம், 9/11, கீழகொண்டயம் பேட்டை, திருவானைக்கோவில், திருச்சி–5.	திருவானைக்கோவில் நகர கூட்டுறவு வங்கியை மீண்டும் செயல்படுத்த கோருவது – தொடர்பாக.
		துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
		திருவானைக்கோவில் நகர கூட்டுறவு வங்கியால் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் சரிவர வசூல் செய்யப்படாததாலும் இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றாமலும் கூட்டுறவுச் சங்கங்களின் மாநிலப் பதிவாளர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையை சரிவர கடைபிடிக்காமலும் வங்கியின் துணைவிதியின்படி செயல்படாமலும் தன்னிச்சையான நிர்வாகம் செயல்பட்டதாலும் வங்கியின் நிதிநிலைமை மிகவும் மோசமானதால் வங்கியின் உரிமத்தை இந்திய ரிசர்வ் வங்கியால் உரிமம் ரத்து செய்யப்பட்டதை தொடர்ந்து வங்கியை கலைக்கப்பட்டது. திருவானைக்கோவில் நகர கூட்டுறவு வங்கியை புத்துயிருட்ட கோரும் தங்களின் மனு மற்றும் திருவானைக்கோவிலின் பகுதி மக்களின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு திருவானைக்கோவில் நகர கூட்டுறவு கடன் சங்கமாக மாற்றி விரைவில் செயல்பட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (திருச்சிராப்பள்ளி, துணைப்பதிவாளர்/பணியாளர் அலுவலர் அவர்களின் கடித எண்.ந.க. 9677/ 2010/ ந.வ. நாள்:15–10–2010)	திருவானைக்கோவில் நகர கூட்டுறவு வங்கியை மீண்டும் தொடங்கி செயல்படுத்த, தனிக் கவனம் செலுத்தி விரைவில் நடவடிக்கை எடுக்க, திருச்சிராப்பள்ளி மண்டல துணைப் பதிவாளர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
திருவாணைக்கோவில் நகர கூட்டுறவு வங்கி கலைத்தல் நடவடிக்கை இணைப் பதிவாளர், திருச்சிராப்பள்ளி செயல்முறை ந.க.13350/2002 SFI நாள்: 05.12.2012ன்படி சட்டப்பிரிவு 142ன் கீழ் ரத்து செய்யப்பட்டு, 11.03.2013 முதல் நகர கூட்டுறவு கடன் சங்கமாக செயல்பட்டு வருகிறது. அரசு ஆணை (நிலை) எண்.127 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை (CT2) நாள்: 19.07.2013–ன் வழி இந்நடவடிக்கைகள் பின்னேற்பு செய்யப்பட்டுள்ளது. (இணைப் பதிவாளர், கூட்டுறவுத் துறை, திருச்சிராப்பள்ளி அவர்களின் கூடித எண்.ந.க.1770/ 2014 வேசேச நாள்: 06.04.2015)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5.	21717	திரு. எஸ். பன்னீர்செல்வம், மாவட்ட குழு உறுப்பினர், C.P.I (M) 40-B, முதல் நவாப் தோட்டம், உறையூர், திருச்சி–3.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பராய்த்துறை ஊராட்சி ராமகிருஷ்ண தபோவனம் தலைமை அலுவலகத்தின் எதிரே இராமவாத்தலை வாய்க்கால் குறுக்கே கட்டப்பட்ட பாலம் பழுது நீக்கம் செய்யக் கோரியது.

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
7.	21769	திரு. மா. சுப்பிரமணியன், தலைவர், உப்பாறு பாசன சங்கம், அக்கரைப்பட்டி, சமயபுரம்–621 112.	மண்ணச்சநல்லூர் வட்டத்திற்கு சார்நிலைக் கருவூலம் அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
மண்ணச்சநல்லூர் வட்டத்திற்கு புதிய சார்நிலை கருவூலம் அமைப்பது தொடர்பாக, தக்க நடவடிக்கை மேற்கொண்டு திருச்சி கருவூல அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.19345/2006/பி1, நாள்: 19–07–2006இல் இயக்குநர், கருவூல கணக்குத் துறை, சென்னைக்கு பிரேரணை அனுப்பப்பட்டது. அதன்மீது நடவடிக்கை மேற்கொண்டு, சிறப்பு ஆணையர், கருவூல கணக்குத் துறை சென்னை அவர்களின் கடித எண். ந.க. 41028 / 2006, நாள்:14–09–2009–இல் கருத்துரு அரசு செயலர் நிதித் துறை (கருவூல கணக்குத் துறை III) புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை அவர்களுக்கு ஆணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. (மாவட்ட கருவூல அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண். ந.க.28961/2010/பி1/ நாள்: 29–09–2010)	திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூரில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பாக அனுப்பப்பட்ட கருத்துரு மீது சிறப்பு கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க நிதித் துறைக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(7)	(8)
அரசாணை எண்.401 நிதி (க.க.3) துறை நாள்:15.11.2012–ன்படி மண்ணச்சநல்லூர் வட்டத்திற்கு புதிய சார்நிலை கருவூலம் அமைப்பதற்கு ஆணை பெறப்பட்டு 09.08.2013 முதல் மண்ணச்சநல்லூர் சார்நிலைக் கருவூலம் 116/8 PAR காம்ப்ளக்ஸ், எதுமலை ரோடு, மண்ணச்சநல்லூர் என்ற முகவரியில் இயங்கி வருகிறது. (கருவூல அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண்.ந.க.20047/J1/2012 நாள்: 06.04.2015)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது. அ.மு.பி. ஜமாலுதீன், செயலாளர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



அரசு மைய அச்சகம், சென்னை–600 079.